முறையில் தற்போது கூட ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போக்க அரசாங்கம் தண்ணீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த பாதகம் ஏற்பட்டிருப்பதற்கு தண்ணீர் விநியோகம் காரணம் அல்ல. பருவ மழை பொய்த்ததுதான் அதற்குக் காரணம். பருவ மழை பொய்த்ததற்கு என்னால் எதுவும் செய்ய முடியாது.

ஐயன்குளம் ஏரியை ஆழப்படுத்தல்

* 729. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கருகில் உள்ள ஆயக்குடியைச் சேர்ந்த ஐயன் குளத்தை ஆழப்படுத்தி வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1.20 இலட்சம். எதிர் பார்க்கப்படும் உணவு உற்பத்தி 87.75 டன்களாகும். ஒரு டன்னுக்கு ஆகும் செலவு ரூ. 1,368. இத்திட்டம் 1974–75-இல் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 730. வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தினை ஊக்குவிக்க (Consumer Co-operative Movement) அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, சிறு சிறப்பங்காடிகள், நுகர்வோர் தொழில்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், கிடங்குகள் கட்டுதல், பாரவண்டிகள் வாங்குதல், பங்கு மூலதனம், நிர்வாக உதவித்தொகை ஆகியவற்றை வழங்குதல் போன்ற பல்